## 15. சிலப்பதிகாரத்தில் இறைமை

முனைவர் தே.ராஜசீலி
உதவிப் பேராசிரியர்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி,
பெரியகுளம்.

சமயக்கருத்துக்கள் இலக்கியங்களில் முக்கிய இடம் பெறுகின்றன. அந்த வகையிலே சமயம் பொதுமைக் காப்பியம் என்று அழைக்கப்படும்படியான சமயக் கருத்தாக்கங்கள் எல்லாவற்றையும் சிலம்பு பேசுகின்றது என்றாலும் சமணக் காப்பியமாக அடையாளப்படுத்துவதற்கான போக்குகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியத்தில் இறைக்கொள்கை, இறைத்தன்மை, இறைச்சிந்தனையினை மையமாக வைத்து ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**இளங்கோவின் சிந்தனை:**

சிலம்பை எழுதிய இளங்கோவடிகள் சமணரென்பதும் சமண சமயக் கொள்கையின் பரவலாக்கத்தைச் சிலம்பின் மூலம் நிகழ்த்தி இருக்கிறார் என்பதும் ஒரு கருத்தியலாக முன்னெடுக்கப்படுகிறது. எல்லாச் சமயங்களின் வழிபடுமுறைகளையும் அறிந்து வைத்திருந்த இளங்கோவடிகள் ஒரு சமூக அமைப்பில் உள்ள அத்தனை செயல்பாடுகளையும் காப்பியப் போக்கிலே சொல்லிச் சொல்கிறார். சமணத்தின் கருத்தியலை முன்னிலைப்படுத்தியதோடு நாட்டுப்புற தெய்வ மரபின்படியான கல் சமைத்தல் என்ற போக்கையும் நியாயப்படுத்துகிறார்.

பதிகம் பாடியோர் மூன்று உண்மைகள் என்று அவர்களின் வாசிப்பிலிருந்து சொல்கிறார்கள். ஆனால் இளங்கோவடிகள் சொல்வதைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது கதைகேட்டு காப்பியம் படைத்ததாகச் சிலம்பும் பதிகமும் சொல்கின்றன. நற்றிணையில் உள்ள ஒரு முலையெறிந்த 'திருமாவுண்ணி' என்ற தொன்மச் சிந்தனையும் இளங்கோவடிகள் காப்பியம் செய்வதற்கு துணை நின்றிருக்கும். கதை வழி கருத்தாக்கப்பரவலைச் (சமண சமய கருத்தாக்கங்களை) செய்திருக்கின்றார். அதனால்தான் காப்பிய நோக்கமாக இவ்வாறு கூறுகின்றார்.

"கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்"

(சிலம்பு 30: 197 - 98)





என்கிறது சிலம்பு. இதில் குறவர்கள் கதை சொல்லும் போக்கு இளங்கோவடிகளால் கதை சொல்லும் யுக்தியாக வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுண்டு. ஒருநாட்டில் என்ன நடக்கின்றன என்று ஒற்றன் மூலம் தெரிந்து விடும் அப்படி இருந்தும் மதுரையே பற்றி எரிவது சேர மன்னனுக்குத் தெரியவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும். குறவர்கள் மூலம் சொல்ல வைக்க வேண்டும் விரும்பியதால் அவ்வாறு செய்திருக்கிறார்.

கடவுள் மறுப்பிலே நாட்டம் கொண்ட சமணக் கொள்கையுடையவர் எப்படி கண்ணகிக்கு கல் சமைக்க வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்த முடியும். மேலும் சமணத்திலே பெண்களுக்கு முக்தி இல்லை, ஆண் வடிவம் கொண்ட பிறகே முக்தியடைய முடியும் என்று இருக்கும் போது கண்ணகியைத் தெய்வம் என்றும் வணங்குதலுக்கு உரியவள் என்றும் எப்படிக் கூறமுடிந்தது.

"கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"

(சிலம்பு 15: 143 - 44)

என்கிறது சிலம்பு. இது தமிழ்ப்பண்பாட்டுச் சூழலில் உள்ள உயரிய பண்பை உணர்ச்சிவயப்பட்டு சொல்லியதாகத்தான் தெரிகிறது.

**சங்ககாலச் சமயங்கள்:**

சமணம் பௌத்தம், சைவம், வைணவம் என்று அடையாளப்படுத்தப்படும் சமயங்கள் சங்க காலத்தில் தமிழ் நிலப்பரப்பில் எவ்வாறு இருந்திருக்கும் தொல்காப்பிய நான் நிலமும் நான்கு கடவுளும் என்ற பகுப்பிற்குள் சைவ, வைணவக் கடவுள்கள்தான் தென்படுகின்றன. தொல்காப்பியம் வடசொல்பற்றிப் பேசுவதால் வடபண்பாட்டுக் கலப்பு நிகழ்ந்து விட்டது என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். மேலும் 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' என்பதில் வேந்தன் என்பவன் இந்திரன் என்று உரையாசியர்கள் எழுதுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்திரனுக்கு எடுக்கப்பட்ட இந்திர விழா பற்றிய குறிப்பு 'ஐங்குறுநூற்றுப்' பாடலில் உள்ளது.

**சைவம்:**

வைதீக சமயங்களில் ஒன்றான சைவ சமயக்கருத்துக்கள் சிலம்பில் இடம்பெற்றுள்ளன. சைவம் தழைத்த குன்றென சைவக்கருத்துக்களை குறவர்களின் மொழியிலே குன்றக் குறவை என்னும் காதையின் வழி வெளிப்படுத்துகின்றார். குரவைக் கூத்து என்பது வெற்றிக்

களத்தில் வெற்றிக்கு காரணமானவனின் புகழ்பாடுவதாகும். இதைத்தான் தொல்காப்பியம் முந்தைய குரவை பிந்தைய குரவை என்று கூறுகின்றது.

"வென்று கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்"
(தொல் - 1022)

என்பதாகும். தமிழ் நிலம் சார்ந்த கூத்து வழியே இறைவனின் புகழ்பாடுதல் அல்லது வேண்டுதல் என்ற போக்கிலே நிகழ்த்தப்படுகின்றது. ஒரு முலையிழந்த நிலையில் இருந்த கண்ணகியைக் கண்டு அவளை வணங்கிக் குன்றின் தலைக்கடவுளான வேலனை வழிபட்டு குரவை ஆடினார்கள்.

"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே"
(சிலம்பு 24:10)

என்று முருகன் பெருமையைக் கூறிக் குரவையாடினார்கள். முருகனின் பிறப்பு பற்றிய கதையாடல்களை எல்லாம் தெரிந்து வைத்திருந்ததால் குறப் பெண்களின் கூற்றிலே இவ்வாறு சொல்ல முடிந்தது. குன்றக்கடவுள் முருகன் என்பது தொல்காப்பியக் கூற்றாகும்.

"சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல்:951)

என்பதற்கு 'முருகன் விரும்புகின்ற மேகம் சூழ்ந்த மலையையுடைய குறிஞ்சி நிலமும்' என்று உரையாசிரியர் எழுதுகின்றார்.

**வைணவம்:**

திருமால் பற்றிய செய்திகளை ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியிலே பதிவு செய்திருக்கிறார். கோவலனும், கண்ணகியும் அடைக்கலம் கொடுக்கப்பட்டது மாதிரி என்ற இடைக்குலப் பெண்ணிடம் அப்பெண்ணின் மூலமே கூத்து நிகழ்த்தப்பட்டு மாயோனின் பெருமை பேசப்படுகிறது.

"பாம்பு கயிறாகக் கடல் கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன் வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"
(சிலம்பு 17: 20 - 22)

என்று திருமால் அமுதம் கடைந்த கதையை நிகழ்த்தி குரவையாடிவார்கள் என்றார் இளங்கோவடிகள்.

"மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல்: 951)

என்கிறது தொல்காப்பியம்.





**சமணம்:**

சிலம்பு சமணக் காப்பியம் இல்லை என்று மறுப்பதற்கான காரணம் தமிழ் நிலப்பரப்பிற்குள் இருந்த சமயங்களின் கருத்தியல்களைப் பற்றிப் பேசுவதால் என்று எடுத்துக் கொள்ளலாம். கோவலன் கண்ணகி திருமணம் வைதீக நெறிப்படி நடந்தது என்பது சிலம்பு உணர்த்தும் கருத்தாகும்.

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோண் பென்னை"
(சிலம்பு : 1: 52:53)

என்று கண்ணகியும் கோவலனும் தீயை வலம் வந்து மறை முழங்கச் சடங்கு செய்து கணவன், மனைவியாகினர்.

சிலம்பின் கதையோட்டத்தில் கௌந்தியடிகள் இல்லாமலும் சமணக்கருத்துக்களை சொல்லாமலும் கதையை நகர்த்திச் சென்றிருக்க முடியும் அப்படி இருந்தும் சமணக் கொள்கைகளை விளக்கியும் செல்கிறார்.

"பொய்யுறை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
.....................
செய்நன்றி கொல்லன் மின் நீநட் பிகழ்மின்"
(சிலம்பு: 30:188 - 91)

என்று தமது காப்பிய நோக்கினை தெளிவுபடுத்துகின்றார் இளங்கோவடிகள்.

**நாட்டுப்புற தெய்வ மரபு:**

வேட்டுவர் எனும் காதையின் வழியாக நாட்டுப்புறத் தெய்வ மரபின் பண்பைப் பதிவு செய்திருக்கிறார். சாலினி தெய்வம் ஏற்பட்ட நிலையில் அதாவது தெய்வத்தை தன்னுள் வரவழைத்துக் கொண்டு குறிசொல்லுதல் (நற்சொல்) என்பது மரபாகும். தமிழ் மரபிலே ஆவி சார்ந்த நம்பிக்கை உண்டு. அந்த ஆவியை தன்னுள் வரவழைத்துக் கொண்டு குறிசொல்லுதல் என்ற போக்கினை சங்க காலம் தொட்டே காண முடியும். வேலன் வெறியாட்டு நிகழ்வும் இது போன்றதேயாகும். அப்படி சாலினி தெய்வம் ஏற்பட்ட நிலையில் கண்ணகியைப் புகழ்ந்து கூறுகிறாள்.

"வழுற்குவிற் றடக்கை மறக்குடித் தாயத்து...
கையெடுத் தோச்சிக் கானவர் வியப்பு"
(சிலம்பு: 12: 6-9)



Scanned by CamScanner

என்று தெய்வம் ஏற்பட்ட பெண்ணின் மெய்ப்பாடுகளை இளங்கோ சுட்டுகிறார்..

**இளங்கோவடிகளின் சமயநோக்கு:**

ஒன்றைப் பற்றிச் சொல்வதற்கும் ஒன்றை வற்புறுத்துவதற்கும் வேறுபாடு இருக்கிறது. காணாத நிகழ்வைக் கதை கேட்டுத் தன் அறிவு பின்புலத்திலே காப்பியமாக்குகிறார். காப்பிய ஓட்டத்திலே மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலே சில நற்கருத்துக்களையும் படைத்துக் காட்டுகிறார். கூடவே சமணத்தைப் பரவலாக்கம் செய்யும் கருத்துக்களையும் சேர்க்கிறார். சிலம்பிலே சமணத்தின் பிறப்புக் கோட்பாடு முக்கியப்பங்கு வகிக்கிறது. கோவலன் இறப்பிற்கு முற்பிறப்பு வினைதான் காரணம் என்று சொல்கிறது. இதை மதுராபுரித் தெய்வத்தின் கூற்றிலே சொல்கிறார்.

“முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன்
வெந்திறல் வேந்தற்கு கோத்தொழில் செய்வோன்
பரத னென்னும் பெயரெனக் கோவலன்”

(சிலம்பு: 23: 152:54

என்கிறது சிலம்பு. கோவலன் இறந்தான் அதற்குக் காரணமான மன்னனும் இறந்தான். பிறகு ஏன் மதுரையை எரிக்க வேண்டும் மன்னவன் தவறை முறையிட்ட கண்ணகி அதே மக்களை ஏன் எரிக்க வேண்டும் என்பற்கு முன்வினையே காரணம் என்று இளங்கோ சொல்கிறார். சிலம்பிலே சைவ, வைணவ கருத்தாக்கங்களைப் பெரிதும் சொல்வதற்குக் காரணம் ஒன்று கதையோட்டத்திற்குத் தேவைப்பட்டிருக்கிறது. இன்னொன்று சமண சமயக் கொள்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதற்குப் பயன்பட்டு இருக்கிறது. அனைத்துச் சமயங்களையும் பற்றிப் பேசுவது சமய ஒற்றுமையை ஏற்படுத்துவதை விட சமணம் சிறந்தது என்று சொல்வதற்கேயாகும். ஏனெனில் சமணக் கொள்கைகளே வலுவானதும் உண்மையானதும் என்று இளங்கோவடிகள் காட்டுகிறார்.

**முடிவாக:**

சிலப்பதிகாரக் கதை நிகழ்வு என்பது முன்கூட்டியே திட்டமிட்ட ஒன்று. அதாவது பழம்பிறப்பு வினையால்தான் நடந்திருக்கிறது என்று சமணத்தின் பிறப்புக் கொள்கை வழி வலுப்படுத்துகிறார். ஆகவே சிலப்பதிகாரம் சமணத்தை முதன்மைப் படுத்துவதற்காக படைக்கப்பட்ட காப்பியமாகக் கருத முடியும். எனவே இவ்விலக்கியத்தில் இறைவெளிப்பாடு மேம்பட்டுத் திகழ்வதை அறியலாம்.



Scanned by CamScanner